(6)

~~257~~

(70)

**NEP/CO/SG/02**

**05.05.2006**

**சுற்றறிக்கை : 03/2006**

சகல கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்களுக்கும்,

## களவு மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட பொருட்குறைவை கழித்து எழுதுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பித்தல்

---

வுடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள ப.நோ.கூ.சங்கங்கள் மற்றும் ஏனைய சங்கங்கள் களவு, மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட பொருட்குறைவை கழித்து எழுதுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கும்போது ஆவணங்கள் பூரணமாக இணைக்கப்படாமல் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டமையை என்னால் அவதானிக்க முடிந்துள்ளது.

எனவே எதிர்காலத்தில் இவ்வாறான விண்ணப்பங்களை சிபாரிசு செய்யும் போது பின்வருமாறு செயற்படும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

1. களவினால் ஏற்பட்ட பொருட்குறைவு கழித்து எழுதுதல் தொடர்பாக பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுடன் பொலிஸ் அறிக்கையும் இயக்குனர்சபை, பொதுச்சபைத் தீர்மானங்களும் இணைக்கப்படல் அவசியமானதாகும்.

2. இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட பொருட்குறைவு கழித்து எழுதுதல் தொடர்பாக இணக்குனர்சபை, பொதுச்சபைத் தீர்மானங்களுடன் கிளை அமைந்துள்ள பிரிவு கிராம சேவகர், மற்றும் பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தல் கடிதங்களும் இணைக்கப்படல் வேண்டும்.

**இ.இளங்கோவன்,**
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்.(வகிமா)